மாநிலத்தில் கேரள அரசு என்றைக்கு அதை அமல்படுத்துகிறதோ அன்றைக்கு நாங்கள் அதை அமல்படுத்துகிறோம் என்று மத்திய அமைச்சர் நடத்திய கூட்டத்திலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இங்கே தொழிலாளர் பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

குடிநீர்

*689—**திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் திருத்துறைப்பூண்டி அருகிலுள்ள வேலூர், நெடும்பலம் சிற்றூராட்சிகளை இணைத்துக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேலூர் ஊராட்சியிலுள்ள வேலூர் மற்றும் 3 குடியிருப்புகள் மேல ஆதி திராவிடர் தெரு, கண்ணாத்தாங்குடி, கண்டலச்சேரி, நெடும்பலம் ஊராட்சியில் உள்ள நெடும்பலம் மேற்கு, கிழக்கு, தெற்கு குடியிருப்புகள் மற்றும் கோயில் தோப்பு ஆகிய பகுதிகளுக்கு வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ரூபாய் 9 இலட்சத்து 97 ஆயிரம் மற்றும் ரூபாய் 26 இலட்சத்து 87 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டமானது முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டு, தற்போது மேற்கண்ட குடியிருப்புகள் அனைத்தும் முழுமையான குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாக உள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன்.*

2007 ஏப்ரல் 9]

முற்பகல் 9–40

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் குடிநீருக்காக ஆழ்குழாய் போடுகிறபோது, அநேகமாக நூற்றுக்கு 85 உப்பு நீராகத்தான் இருக்கும். இதை உணர்ந்த மரியாதைக்குரிய நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தக் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இன்றைக்கு எங்கள் பகுதியில் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரை அருந்தி வருகிறோம். இருந்தாலும், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு அருகில் இருக்கும் வெல்லூர் ஊராட்சி, அதேபோல, நெடும்பலம் ஊராட்சி என்ற இரண்டு ஊராட்சிகள் விடுபட்டிருந்தன. நமது தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவற்றுக்கு குடிநீர் வழங்குவதற்கான உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பிலும், வெல்லூர், நெடும்பலம் ஊராட்சி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். நம்முடைய உறுப்பினர் அவர்களும் நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு மிக்க நன்றி. அதேவேளையில், தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி தொடங்கியிருக்கிறது, பல்வேறு கிராமங்களில் இருக்கிற ஆழ்துளைக் கிணறுகள் இப்போது வறண்டுவிட்ட நிலையில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களில், பல கிராமங்களில் இந்த நிலை இருக்கின்ற காரணத்தால், வறட்சிக் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, குடிநீர்த் திட்டத்திற்கு அரசு சிறப்பு நடவடிக்கை ஏதாவது எடுக்குமா? எந்த வகையில் எடுக்கவிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்படக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, அதற்குரிய

ஆய்வுப் பணிகளிலே அரசு முழுமையாக இப்போது ஈடுபட்டிருக்கிறது. எனவே, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் ஏதேனும் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், அது அரசினுடைய கவனத்திற்கு வரும் என்று சொன்னால், நிச்சயமாக உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

23—

கசிவுநீர்க் குட்டைகள்

***17789—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், காவேரிபுரம், கருங்கல்லூர், லக்கம்பட்டி ஊராட்சிகளில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி, காவேரிபுரம் கிராமத்தில் *2006–2007* ஆம் நிதியாண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் ரூ. *4.15* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும், மழைநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ. *1.90* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும், கருங்கல்லூர் கிராமத்தில் ரூ.*2.50* இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும் கட்டப்பட்டு *31–3–2007*–ல் பணிகள் முடிவுற்றுள்ளன.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதிக்கு உட்பட்ட காவேரிபுரம் ஊராட்சி, கருங்கல்லூர் ஊராட்சி, லக்கம்பட்டி ஊராட்சி போன்ற பல்வேறு ஊராட்சிகள் பாசன